தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

1994 ஏப்ரல் 19, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 6, பவ—திருவள்ளுவர் ஆண்டு 2025

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை''.

ஒருவருக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே யாகும். கல்வி தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வம் அல்ல.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

1. தகவல் கோரல்.

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவனஈர்ப்பு (குறுக்கீடுகள்) திரு. பரிதி இளம்வழுதி, திரு. பழனிசாமி, நீங்கள் கொடுத்திருக்கிற பிரச்சினைகள் என்னுடைய ஆய்விலே இருக்கின்றன. இன்று கேள்வி நேரம் இல்லாத தன்மையினாலும் (குறுக்கீடு) நீங்கள் கொடுத்த பிரச்சினை என்பது நேற்றிரவு நடந்தது, அதிலே முழு விவரமும் சேகரித்து அவைக்குத் தெரிவிப்பதாக அரசிடமிருந்து எனக்குத் தகவல் தரப்பட்டிருக்கிற காரணத்தாலும் நாளை உங்கள் பிரச்சினை எடுத்துக் கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) நாளை உங்கள் பிரச்சினை எடுத்துக்கொள்ளப்படும். (குறுக்கீடுகள்) அது நேற்றிரவு நடந்தது, நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டு வருகிறது என்கிற தகவல் எல்லாம் கொடுத்திருக்கிறார்கள். ஆனால் அவையிலே வந்து முழு விவரமும் தெரிவிப்பதற்காக நாளை எடுத்துக்கொள்வதாக நான் தெரிவித்திருக்கிறேன். உங்களுக்கும் அதுவே என்னுடைய பதிலாக இருக்கட்டும். நாளை எடுத்துக் கொள்கிறேன். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு (குறுக்கீடுகள்) நாளை எடுத்துக் கொள்கிறேன் என்று சொல்கிறேன் அல்லவா. (குறுக்கீடுகள்) நாளைக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது, உட்காருங்கள், முழு விவரமும் சேகரித்து நாளை அவைக்குத் தெரிவிக்கப்படும். (குறுக்கீடுகள்) இந்த

அவைக்கு வந்து தெரிவிப்பதற்கு (குறுக்கீடுகள்) இன்றைக்கு 10 மணிக்கே நேரடியாகக் கேள்வி நேரம் இல்லாமல் அவையின் நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டி இருப்பதால் அவகாசமில்லை, எனவே நாளை எடுத்துக்கொள்ளலாம்.

2. கவன ஈர்ப்பு.

(அ) புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உடையார்பாளையம் வட்ட மக்களிடம் அதிகாரிகள் கெடுபிடி வசூல் செய்வது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு, திரு. கே.கே. சின்னப்பன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. கே.கே. சின்னப்பன்.

திரு. கே.கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ''கடந்த புயல் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உடையார்பாளையம் வட்டத்திலுள்ள மக்களுக்கு அரசு நிவாரண உதவிகள் உடன் வழங்கவும், நிலவரி, நீர் வரியைத் தள்ளுபடி செய்யவும், கூட்டுறவுக் கடன்களை நீண்ட காலக் கடனாக மாற்றி வழங்கவும் அரசு அறிவித்தும், அதிகாரிகள் கெடுபிடி வசூல் செய்வது குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை.

1993 ஆம் ஆண்டு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட புயல் திண்டுக்கல்—அண்ணா, தஞ்சாவூர், நாகை-காயிதே மில்லத் மற்றும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட நீலகிரி, மதுரை, திருச்சி, தென்னாற்காடு—வள்ளலார் மாவட்டங்களில் விவசாயிகளிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டிய நிலவரியைத் தள்ளுபடி செய்யவும், கூட்டுறவுக் கடன்களை மத்திய காலக் கடனாக மாற்றவும் அரசு முடிவு செய்துள்ளது